நீர்வளத்தை பெருக்குவோம்...

வளங்குன்றா வேளாண்மைக்கு வழிவகுப்போம்...



mssrf

TATA CONSUMER PRODUCTS LIMITED











# “காய்ச்சலும் பாய்ச்சலும்” (Alternate Wetting and Drying - AWD)

“காய்ச்சலும், பாய்ச்சலும்” முறையில் நெற்பயிர்களில் தேவைக்கேற்ப நீரை பயன்படுத்தி விளைச்சலை பெருக்கலாம்.

நிலத்தை நனைப்பதும் பின்னர், உலர விடுவதுமான முறையில் வேர்ப்பகுதிக்கு நல்ல காற்றோட்டமும் சூரிய ஒளியும் சென்றடையும் பொழுது மகசூல் அதிகரிக்கிறது.

நீரை அதிகம் பயன்படுத்தும் போது நீரோடுசத்துக்களும் வீணாகிறது. ஆனால், காய்ச்சல் – பாய்ச்சல் (AWD) முறையில், தேக்கிய நீரை மண் உறிஞ்சிய பிறகே, பயிரின் வளர்ச்சி மற்றும் சூழலை பொறுத்து, மீண்டும் நீரை பாய்ச்ச வேண்டும்.

நெற்பயிரின் வேரானது குறைந்தது 15 சென்டி மீட்டர் வரை வளரக்கூடியது. எனவே, வேர்ப் பகுதியில் 10 சென்டி மீட்டருக்கு கீழ் நீரின் அளவு செல்லும் போது நீரை பாய்ச்சலாம். வயலில் நீர்மட்டத்தை கண்காணிக்க நீர்மட்டக் குழாயை (பானி பைப்) பொருத்தி நீர்மட்டத்தை கண்காணிக்கலாம்.

நீர் உறிஞ்சும் திறன்: நெற்பயிர் வேருக்கான நீர் உறிஞ்சும் திறனை அதிகரிக்கும்.

நீர் சேமிப்பு: வழக்கமாக நெல்லுக்கு பயன்படுத்தப்படும் நீரின் அளவில் இருந்து 30 % சேமிக்க முடியும்.

மண்வளம் அதிகரிப்பு: மண்ணில் உள்ள சத்துக்களின் இழப்பை கட்டுப்படுத்தி மண்வளத்தினை அதிகரிக்கலாம்.

## நீர்மட்டக் குழாய் (பானி பைப்)

இது 30 சென்டி மீட்டர் உயரமும், 10 முதல் 15 சென்டி மீட்டர் விட்டமும் கொண்ட ஒரு குழாய் ஆகும். இந்த குழாயில் 15 சென்டி மீட்டர் நீளத்திற்கு சுற்றியும் துளைகள் போடப்பட்டு இருக்கும். இந்த குழாயில் துளையிடப்பட்ட பகுதியை நிலத்திற்குள் பதிக்கவேண்டும். மண்ணில் பதிக்கப்பட்ட பிறகு குழாயினுள் அடிப்பகுதி வரை உள்ள மண்ணை வெளியேற்ற வேண்டும். குழாயின் உட்பகுதியில் பார்க்கும் பொழுது மேலிருந்து மூன்றாவது துளைக்கும் கீழாக நீர்மட்டம் இருக்கும் போது மீண்டும் நீர் பாய்ச்சிட வேண்டும்.

ம சா சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், 17, முத்துவேல் நகர், வள்ளலார் கோவில் அருகில், வடுகபட்டி,
பெரியகுளம், தேனி மாவட்டம். போன்: 9843903437, 9626553308